THE MADRAS LEGISLATIVE COUNCIL

Friday, the 8th March 1968.

The House met in the Council Chamber, *Fort St. George*, at three of the clock, Mr. Chairman (The Hon. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

Starred questions.

Prosperity Brigade.

* 211 *Q*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the chief Minister be pleased to state:—

(*a*) the chief Officer in-change of the prosperity Brigade Madras state and his salary:

(*b*) whether the Chief Officer is to be appointed in each district.

(*c*) the salary and allowances of those officers; and

(*d*) the details of persons, who will get salary and allowances among the other persons, connected with the prosperity Brigade?

சீரணி படை.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன். :—

(அ) தமிழகத்தில் சீரணிப் படைக்கு தலைமை அதிகாரி யார்? சம்பளம் எவ்வளவு?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைமை அதிகாரி நியமிக்கப்படுவாரா?

(உ) அவர்களுக்கு மாதச் சம்பளம், படி எவ்வளவு?

(எ) இதில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் யார் யார் சம்பளம், படி பெறுவார்கள்?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: (on behalf of the Hon. the Chief Minister):

(அ) திரு. கே. பரமசாமி ரூ. 550.

(இ) இல்லை.

(உ) இவ்வினாக்கள் எழவில்லை.

(எ)

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, இந்த சீரணிப் படையிலே இந்த அதிகாரியைத் தவிர வேறு அதிகாரிகள் இல்லையா? அல்லது வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுச் சம்பளத்திற்குப் பதில் அலவன்ஸ் மட்டும் கொடுக்கப்படுகிறதா? அப்படி நியமிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: இந்த ஒரு அதிகாரி தான் மாநிலம் பூராவிற்குமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்னையில் மட்டும் Part-time ஆக ரூ. 50 கௌரவ சம்பளத்தில் வேலை பார்க்கும் க்ளார்க், கௌரவ பகுதி நேரமாகப் போடும் ஏற்பாடு இருக்கிறது. மற்ற இடங்களில் அதிகாரிகள் யாரும் போடப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த சீரணிப் படைக்கு எந்தவிதமான Rules and Regulations-ம் இல்லை என்று சொல்லப்படுகிறது. அது பற்றி விசாரித்தார்களா ? விசாரிக்கப்படுமா ? எப்போது விசாரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதிலே பணியாற்ற வேண்டியவர்கள் "இன்னின்ன பணிகளைச் செய்வது என்ற கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிறவர்கள்", சீரணிப் படையில் சேரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 10 தொண்டுகளில் அக்கறை கொண்டு, ஓய்வு நேரத்தை இதில் கழிக்க விரும்புகிறவர்கள், இதில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் வேறு ஒன்றும் இதற்கு சட்டதிட்டமில்லை.

திரு. எம். எத்திராஜுலு : சீரணிப் படையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், (Home Guards) போன்றவர்களைச் சேர்க்க ஏதாவது உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சீரணிப் படையில் எல்லா தரப்பினரும் கலந்து கொள்ளலாம் என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

Death of a labourer in Thiruchirappalli Town.

***2'2 Q—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—**

(a) whether it is a fact that three Police constables joined together and beat to death one labourer of Tharana in October, 1967, wear the new over bridge in Thiruchirappalli and ran away, after throwing the body before a lorry;

(b) whether the lorry driver made a complaint to the veppur check-post. and

(c) the action taken there on ?

தொழிலாளி மரணம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி, தாரணார் பகுதியில் வசிக்கும் ஒரு தொழிலாளியை, திருச்சி புதிய மேம்பாலத்தில் மூன்று போலீசார் சேர்ந்து அக்டோபர் (1967) மாதத்தில் அடித்துக்கொன்று லாரியின் முன் தூக்கி எறிந்துவிட்டு ஓடியதாகக் கூறப்படுவது உண்மையா ?

(ஆ) இதை லாரி டிரைவர் வேப்பூர் செக் போஸ்டில் புகார் செய்தாரா ?

(இ) இது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (on behalf of the Hon. the Chief Minister): (அ), (ஆ), and (இ) : காவற்றுறைத் தலைவரிடமிருந்து (Inspector-General of Police) கிடைக்கப்பெற்ற ஓர் அறிக்கையின்படி, மணி என்ற ஒரு நபர் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் தேதியில் திருச்சி கோட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்த மூன்று காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களால் பலமாக அடிக்கப்பட்டு, அதன்பின் ஓடிக்கொண்டிருந்த லாரி முன்பாக அவர்களால் தள்ளப்பட்டதாகவும் லாரி அவர் மீது ஏறியதின் காரணமாக அவர் இறந்து போனார் என்பதாகவும், மணியின் உறவினர் சிலர் புகார் செய்திருக்கிறார்கள். உண்மை என்னவென்றறிய, திருச்சி கோட்டாட்சித் தலைவர், நடந்த சம்பவம் பற்றி விசாரணை நடத்தி வருகிறார்.